# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்.

VOL. 2. புத்த. ௨. | MADRAS: DECEMBER 1900. சென்னப்பட்டணம், 1900 - ௵ டிசம்பர்-௴. | No. 10 இல ௰

## பெண்களுக்கு உயர்தரப் பாடசாலை.

சகோதர சகோதரிகளே கவனியுங்கள்! நமது சிறுமிகளுக்குக் கல்வி அவசியமென்பதற்குத்தகுந்த காரணங்களை இதுகாறும் பல பத்திரிகை வாயிலாயும் இப்பத்திரிகை வாயிலாயும் நாமும் நம் சகோதரச் சகோதரிகள் சிலரும் பேசிவந்தோமல்லவா? இவ்விஷயத்தில் விருப்புள்ள ஆடவரனேகர்உளரென்றாலும் முன்னிற்கு மாத்திரம் வந்தபாடில்லையே. நம் ராஜப்பிரதிநிதி அவர்கள் சுற்றுப் பிரயாணத்தை ஆங்காங்கு ஆவலுடன் எதிர்பார்த்து அவர் விஜயமான ஒவ்வொரு விடங்களிலும் அளவிறந்த தங்கள் கஷ்டநிஷ்டூரங்களை நம்மவர்கள் முறையிட்ட விபரங்களை நம்மித்திரனில் தினந்தினம் காண்கிறோமே. அவற்றுள் மேற்கண்டபடி பெண்களுக்குயர்தரப்பாடசாலை ஆங்காங்கு கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்படவேண்டிய அவசியத்தைப் பற்றியும் இன்னும் பெண் கல்வி விருத்திக்கு வரக்கூடிய மார்க்கங்களைப் பற்றியும் ஒரு கூட்டத்தினராகிலும் பிரஸ்தாபித்தனராகக் காணவில்லையே? ஐயோ! இப்பெண்களின் நிர்ப்பாக்கியத்தையும் அவற்றால் தாங்களடையும் அசௌகரியங்கள் இன்னதென்றும் அவர்கட்கேதோற்றாமற் செய்து நம்தேசத்தை சில நூற்றாண்டுகளாய்ப் பீடித்திருக்கிற சனியனுடைய வலுவையும் நாம் என்னென்று சொல்வது? குடிகளாகிய நாம் கூறும் விஷயம் யுக்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அயுக்தமென்று தள்ளிவிடப்பட்டாலும் நம்முடைய சௌகரியங்களுக்கு ஆகவேண்டிய காரியங்களை அரசரைக்கண்ட காலத்து முறையிட்டே தீரவேண்டுமல்லாது மற்றும் புகலிடம் யாதுளது? ஆதலின் பிரஸ்தாப பாடசாலை விஷயத்திலும் நம்மவர்கள் ராஜப்பிரதிநிதியவர்கள் முன்கூறியிருந்தால் பிரஸ்தாபித்த சில விஷயங்களைப்போல் ஒருக்கால் விருதாவாய்ப் போனாலுங்கூட இப்பெருத்த குறையொன்று நம் இந்துக்கள் உடைத்தாயிருக்கிறார்களென்றாவது அறியக்கூடுமாயின் இனியொரு சமயத்திலாவது பிரயோஜனத்

தைத் தராமற் போகாதென்றே சொல்லலாம். தவிரவும் இவ்விஷயத்தில் சமமாகிய கல்வி யொழுக்கமுள்ள ஐரோப்பிய வகுப்பைச்சேர்ந்த நம் ராஜப்பிரதிநிதியவர்கள் பெண்பாடசாலை விஷயத்தில் கவனித்திருப்பாரென்றே சொல்லலாம். நமக்காக நம் ஆடவர்கள் முயற்சியை வகித்தார்கள் என்னும் பெருமையையும் சுகப்படுவோமென்னும் தைரியத்தையுமாவது நம் இந்துப்பெண்கள் ஏன் அடையக்கூடாது? நஞ்சிறுமிகளும் கல்வித்தேர்ச்சியடைய எண்ணம் நமக்கிருக்குமாயின் ஆடவர்களுக்கு ஏற்பட்டிருப்பதைப்போல் பெண்களுக்கும் உயர்வகுப்புள்ள பாடசாலைகள் ஸ்தாபிக்க நாம் முயலவேண்டும். அவ்வித உயர்வகுப்பானது ஆடவர்களுக்கேற்பட்டிருக்கும் சில பாடசாலைகளைப் போலல்லாமல் தாலூக்காக்கள்தோறும் ஸ்தாபிக்கவேண்டும். ஏனெனில் யௌவன பருவமடைந்து குடும்பவிவகாரங்களில் கட்டுப்பட்ட ஸ்திரீகளுக்காகவும் சில ஏற்படுகள் ஏற்படவேண்டும். அவையாவன, வாரத்தில் இரண்டுதினங்கள் குறிப்பிட்டு பொதுவிடங்களில் ஒன்றுகூடும்படி செய்து நம்தேசத்திற்கு சுயபாஷையாகிய தமிழில் தகுந்த கியானமும் ஆங்கிலத்தில் சாதாரண பழக்கமுமுள்ள இரண்டு போதகிமார்களை ரூபாய் 30, 20க்குக்குறையாதசம்பளத்திற்கு ஏற்படுத்தவேண்டும். அவ்வவர்கள் புத்திக்கெட்டிய ஒவ்வொரு விஷயங்களைப்பற்றி பிரசங்கிக்கச்செய்தும் தாங்கள் பிரசங்கித்தும் அவர்கள் புத்தியை விளக்கப்படுத்தியும் ஒருவருக்கொருவர் அளவளாவுதல்செய்து பிறகு கலையவேண்டும். பெண் கல்வி விர்த்தியானது, ஆரம்பத்தில் தூண்டுதலாலும் பிரயாசத்தாலும் ஆகவேண்டியதாயிருக்கிறது. விர்த்திக்குவந்த காலத்து ஆண்பிள்ளைகளுக்கு அங்ஙோர் தங்கியிருக்கும் ஊர்களின் படிப்பு முடிந்ததும் தாங்கள் எவ்வளவோ கஷ்டங்களை வகித்து பட்டணத்தாவுகளில் உயர்வகுப்புள்ள பாடசாலைகளில் சேர்ப்பித்து தங்கள் சிறுவர்களை முன்னுக்குக் கொண்டுவருகிறார்கள். அவ்விதமான பிரயாசைகள் சிறிதும் நம் சிறுமிகளுக்காக எடுத்துக்கொள்பவரைக் காண்கிலோம். ஆதலின் இருக்கும் இடமாகவும் போதகாசிரியர் பெண்பாலரேயாகியும் இருக்கும்பக்ஷத்தில் சிறுமிகளின் படிப்பு விர்த்திக்குவர சிறிதும் ஐயமில்லை. போதகாசிரியர்பெண்களாகவே கிடைப்பது அசாத்தியமாயின் நாலு ஐந்து வகுப்புக்கள்வரையிலும் ஆண்போதகாசிரியர்களேயிருத்தலுங்கூடும். ஆண் பாடசாலையுள்ள ஒவ்வொரு சிறிய ஊரிலும் சாதாரணமான பெண்பாடசாலை இருக்கவேண்டியதும் அவசியமே தவிர ஜனங்கள் அடர்ந்த பட்டணத்தாவுகளில் எல்லாம் நன்மையாகவே முடியும். ஆனால் இவ்வளவு ஏற்பாடுகளும் கவர்ன்மெண்டார் ஒருவரைக்கொண்டே முடித்துக்கொள்ளவேண்டுமென்னும் கருத்துடனே பேசவந்தோமில்லை. மற்றென்னவெனின் எவ்வளவோ மிராசு

தார்களும் எவ்வளவோ பாரிவர்த்தகர்களும் லக்ஷக்கணக்காக பொருள் படைத்த கனவான்களும் தங்கள் பெயர்நிலை நிற்காத எவ்வளவோ விதத்தில் தங்கள் பொருள்களைச் செலவிடுகிறார்களே; இப்பேர்ப்பட்ட விஷயங்களில் ஒன்று சேர்ந்து முதல்வைத்து அதில் வரும் வரும்படியைக்கொண்டு நடத்துவார்களானால் தலைமுறை தலைமுறையாக இவர்கள் பேர்வழங்கத் தடையாது? கனதனவான்களே! பெண்கல்வியை விர்த்திசெய்ய வேண்டி ஆங்காங்கு பெண்பாடசாலைகளையும் உயர்தரப்பாடசாலைகளையும் பெண்சங்கங்களையும் ஸ்தாபிக்கப் பொருளுதவியுடன் முன்வாருங்கள். கவர்ன்மெண்டாரையும் கோருங்கள்.

உருக்குமணியம்மாள்.

## மாயாபுரி விநோதக்கதை.

144-வது பக்கத்தொடர்ச்சி

முத்தம்மாளு மவள் கணவனும் சிறிது தூரம் வழிவிடவந்து ஒருவருக்கொருவர் பிரியவசனங்கூறிச் செலவுபெற்றுக்கொண்டு போனார்கள். ஐயரவர்கள் எட்டாநாள் வயலூர்வந்து சேர்ந்தார்.

ஐயரவர்களது வருகைக்கெதிர்பார்த்திருந்த பிள்ளையவர்கள் முதலாயினோர்கள் களிப்போடு மெதிர்கொண்டுவந்து, யோகக்ஷேமங்களை வினவிய பின்னர், ஓரிடத்திலுட்கார்ந்துகொண்டு போனகாரியம் பலித்ததோவென்று கேட்க, ஐயரவர்கள் நடந்த சமாசாரங்களை விவரமாய்ச் சொல்லிய பின்னர் தமக்கு நேர்ந்த அவமானத்தைக் குறித்து வருந்திக் கண்களில்நீர் ததும்பவிருந்தார். கலங்காத இருப்பு நெஞ்சம்படைத்த தனது நாயகர்கண்ணீர்கண்டமாத்திரத்தில், விஜயலட்சுமீ சித்தங்கலங்கிக் கைகால்சோர்ந்து இதற்கு நாமல்லவோ காரணம்; என் கற்புடைமை நன்றாயிருந்தது. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்கிற வாக்கியத்தை யுணர்ந்திருந்தும், மாதர்க்கியல்பாயுள்ள மடமைத் தன்மையாலே புத்திகெட்டுத் தகாத காரியத்தைச் செய்துவிட்டு என் தெய்வமாகிய கணவனுக்குத்தீராத அபகீர்த்தியை யுண்டாக்கிவிட்டேன். இது பலநாளும் வழிப்பட்டாராதித்து வந்த தெய்வத்தை யொருநாள் தடிகொண்டடித்த கதையாயிற்று. நான் கணவன் சொல்லக்கேட்டடங்கி யிருந்திருப்பேனானால் எனக்கும் மரியாதைக்குறைவு வந்திராது. நாயகர்க்கு மானக்கேடும் சம்பவித்திராது. அடாத காரியத்தைச் செய்து கணவன் கண்களில் நீர்பெருகக்கண்டும் இன்னமுமுயிரோடிருக்கிற நான் கொடியராட்சதியல்லவோ? "துடியாப்பெண்டிர் மடியினெருப்பு" என்கிற வாக்கியத்துக்கு நானே யிலக்கியமானேனென்று

கண்ணீரொழுகப், பிராணநாதா! "பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்றபடி யியல்பிலேயே சிற்றறிவினையுடைய அடியேன்செய்த விப்பெரும் பிழையை மன்னித்தருளவேண்டுகிறேனென்று கூறி, நின்றபடியே யடிய ற்றமரம்போல் விழுந்து, உயிர்துறந்தவள் போலச் செயலற்றுக்கிடந் தாள். அதுகண்ட சிவசுவாமி ஐயரவர்கள் திடீரென்றெழுந்து தன் பத்தி னியை யிருகையாலுந்தழுவி யெடுத்து மார்பிலணைத்துக்கொள்ள மகாலட் சுமி விசிறிகொண்டு விசிறினாள். மற்றவர்கள் தங்களாலான வுபசாரஞ்செய் தார்கள். விஜயலட்சுமி சற்றுநல்லறிவு பிறந்து கண்களைத் திறந்துபார்த் தாள். அப்பொழுது ஐயரவர்கள் பெண்ணே! இதென்ன புதுமை; சித் தங்கலங்காதே; உனக்கிந்தப்புத்தி பிறந்தது நமக்கு நல்லகாலம் பிறக்க வேயாம். நீ யதைப்பிறகறிவாய்; தெய்வசங்கற்பத்தால் நேரிட்டதற்கு நீ வருத்தப்பட்டுப் பிரயோஜனமென்ன? உன்பேரில் யாதொரு குற்றமு மில்லை. எனக்கு முன்பேரிற் சிறிதும் வருத்தமில்லை. எப்பொழுதும்போல மனமகிழ்ச்சியாயிரு என்றார். விஜயலட்சுமி தன் கணவனுடைய வார்த்தையி னால் மீண்டுமுயிர்பெற்று, மனக்களிப்போடிருந்தாள். பிறகு யாவரும் போ ஜனத்துக்குச் சென்றார்கள். விஜயலட்சுமி மடைப்பள்ளியிற் சமையல் செய் தாள். நித்தியகடன்களை முடித்துக்கொண்டு யாவரும் போஜனஞ்செய்து தந்தம்வேலையிற் பிரவேசித்தார்கள். ஜெகதீசனோ! யாதொன்றையுங் கவ னிக்கவில்லை. அவன் முகத்தில் மலர்ச்சியேயில்லை. தாய்தந்தையரிப்படிப் பட்ட துயரமடைவதற்கு நாமல்லவோ காரணம்! தாய்தந்தையர் துயரப் படக்கண்டும், அதையொழித்து மகிழ்வியாத புத்திரர்களிருந்ததனாற்பய னென்ன? அந்தப்பிள்ளை வெட்டுண்ட தென்னம்பிள்ளையேயாம். பிதாவின் கவலையொழிப்பதற்காகக் காங்கேயர் கொடிய பிரமசரியவிரதம்பூண்டு பூமி புகழவாழ்ந்தார். பகீரதன் தன் மூதாதைகட்காகப் பட்டபாடு சொல்லவட ங்குமோ? புருரவன் பிதாவினிமித்தந் தன்னிளமைப் பருவத்தை யிழந்து கொடுந்துயரடைந்து மகிழ்ந்தகதை பொய்யோ? பரசுராமன் தன் பிதா வினிமித்தஞ் செய்த பெருஞ்செய்கையாவரே செய்தார்கள். ஸ்ரீராமர் தந்தை சொற்காப்பாற்றுவதற்காக வனவாசஞ்சென்று பட்டபாடு ஜகப் பிரசித்தமன்றோ? பிதாவினிமித்த மொவ்வொருவர் செய்த பெருஞ் செயல்களைக் கேட்டிருக்கும் நான் என்னிமித்த மிழக்கப்பட்ட பெற் றோர் மானத்தைமீண்டும் பெற்றளிக்க முயலாதது ஆண்தன்மையாமோ? என் தெய்வமே! உமது சந்நிதி முன்பாக நான் செய்துகொள்ளும் விரத மாவது நான் மங்களாம்பாளுக்குத் தவணையிட்ட இரண்டு வருஷகாலத் துக்குள்ளாகச் சொன்னபடி நிறைவேற்றுவிட்டால் இறந்துபடுவதே முடிவு. நான் மங்களாம்பாள் பேரிற்கொண்ட பிரியம் நீருண்ட கரிய

மேகங்களினிடையிற் றோன்றிமறையும் மாயவுலகவின்பத்தைக் குறித்தன்று; பிதாவின் அபக்கியாதியை மாற்றுவதற்கே யென்று தமது திருவுளமுணராதிராதாகையால் என்னெண்ணத்தை நிறைவேற்றி வழி வழியாயென்னை யடிமைகொண்டு காத்தருளவேண்டும் ஆண்டவனே! சகல பற்றுகளையுமொழித்துன்பாத மொன்றையே தியானிப்போர் சித்தத்திற் சிதானந்த சொரூபமாய்த் தோன்றிக் கருணைமாரிபொழிவதுனதியற்கை யென்று வேதாதியுண்மை நூல்கள்கூறும் வாக்கியத்தை யுறுதியாக நம்பி, யின்று முதல் சகல பற்றுக்களையும் பற்றறவொழித்து விட்டேன். என்மனதில் வேறுயாதொரு கவலையுமிராதொழிவதாக. உனது திருவடியொன்றேயசைவற்ற தீபச்சுடர்போல நின்றொளிர்வதாக. ஆண்டவனே! எனது உடல் பொருளாவி மூன்றையுமுமது திருவடியாகிய அரணில் வைத்துக்கவலையற்றேன். ஒப்புக்கொள்ளுமீசனே யென்று தன்னை மறந்துவிட்டான். ஒரு மாதங்கடந்த பின் விஜயலட்சுமி நாயகனை நோக்கி நமது குமாரன் செய்கை யென்ன பரிதாபமாயிருக்கிறதே! தேவரீர் கவனியாததேன்? கிருபாநோக்கம் வைத்தருள் செய்யவேண்டுகிறேனென ; ஐயரவர்கள் பெண்ணே! "ஊழிற்பெருவலியாவுள யாதொன்று, சூழினுந்தான் முந்துறும்" என்றபடி விதிவலிக்குமுன் எதுதான் நடக்கும்; விதியின் பலத்தினால் நமது புத்திரனை நாம் பிரியுங்காலநேர்ந்தது. இரண்டு வருஷம் பிரிந்தேதீரவேண்டும். நீ மனதுகலங்காதே! உலகத்தில் நாமிணையற்று வாழுங்காலம் வருமென்று சொல்லி நல்லமுகூர்த்தத்தில் ஜகதீசனுக்கு ஷடாட்சரமந்திரோபதேசஞ் செய்தார். ஜகதீசன், அஃதொன்றினையே யுச்சரித்துக்கொண்டு சிலநாளிருந்தபிறகு நாமிவ்விடத்திலிருந்தாற் காரியசித்தியாகாதென்று கருதியோர் நாளிரவில் தாய்தந்தையரறியாதபடி யெழுந்து வெளியில்வந்து கால்சென்றவாறே போய்விட்டான்.

மூன்றுமாதகாலம் நேர்ப்பட்ட கிராமங்கள், நகரங்கடோறு மலைந்து திரிந்து, இவ்வாறலைவதனாற் பயனில்லை; தனித்தவிடத்திலிருந்து காரிய சித்தி செய்துகொள்வதே யுசிதமென்றெண்ணி, ஆரணியவாசமே யதற்குத் தக்கதென்று கண்டு, அவ்வாறே தன் கருத்தை முடித்துக்கொள்ளக்கருதி வனம் நோக்கிச்சென்றான். சிலநாள் வனங்களிலங்குமிங்குமலைந்து திரிந்து யோக்கியமான விடமகப்படாமையால், என் செய்வது. காலம் வீணாய்ப் போகின்றதே, நாம் கருதிய கருமமுடிக்கத் தெய்வ வல்லமையிருந்தாலன்றி முடியாது. தவைகதியானமாய் நின்றதனைப்பெறுதற்கு ஏகாந்தஸ்தானமே தக்கதென்று வனவாசம்வந்தும் தகுதியான விடமகப்படவில்லையே யென்று வருந்தி, அன்றிரவை யோர் மாத்தடியிற்கழித்து, மறுநாள்விடிய

இரண்டுநாழிகைப் பொழுதிருக்கவெழுந்து, இன்றையதினம் கிடைத்த விடத்திலிருந்து விடுவோமென்றெண்ணிச் சென்றான். இருள் கழியுந்தருணத்தில் ஓர் மலைகாணப்பட்டது. தானிருக்குமிடத்துக்கும் மலைக்கும் இரண்டுயோசனைதூரம் (இரண்டுமைல்) இருக்குமென்றும், எவ்வாறாயினும் அம்மலையையடைந்து அவ்விடத்திற்றானே கடுந்தவம்புரிந்து காரியசித்தியாக்கிக்கொள்வோமென்று நிச்சயித்துத் தாமதிக்காமல் துரிதமாய்ச்சென்று, உதித்து இரண்டுநாழிகைக்கு அந்த மலையடிவாரத்தையடைந்தான். அம்மலையடிவாரத்தின் காட்சிரமணீகரமாயிருந்தது. ஜகதீசன் மனத்திலவணையறியாமல் ஆநந்தம்பொங்கி மேலிட்டது. இரவில் பூத்துத் தேனைத் துளித்துக்கொண்டு காததூரம் பரிமளிக்காநின்ற பற்பல விருட்சங்களும், கெம்புக்கல்லைத்தட்டி தட்டாயடித்ததுபோலச் செவந்து விளங்குந்தளிர்களால் அலங்கரிக்கப்பட்ட மாமரங்களும், தங்கத்தகட்டைப்போலப் பிரகாசித்துக்கொண்டிருக்கும் மலர்கள் நிறைந்த கோங்குவிருட்சங்களும், வயிரக்கமலம்போன்ற புஷ்பங்கள் நிறைந்து துலங்கும் புன்னைவிருட்சங்களும், நாகரத்தினங்களைக்கடைந்து அமைத்ததுபோன்ற செந்நிறமலர்களால் விளங்கிக்கொண்டிருக்கும் பலாசமரங்களும், அம்மலர்கள் தோறுந் தேனையுண்டு பெட்டையோடு கூடிக்களித்து ரீங்காரதொனி செய்துகொண்டுலாவும் வண்டுகளும். மான், மரை, கடமையாதி சாந்தமிருகங்கள் கூட்டமாகக்கூடி விளையாடிக்கொண்டிருக்கும் காட்சியும், மரங்களின்மேல் பேடுகளோடு கூடிச் சிறையை விரித்து வெயில் காய்ந்துகொண்டிருக்கும் மயிலினங்களும், சோவென்று ஒலித்துக்கொண்டு வெள்ளியையுருக்கிச் சாய்த்தாற்போல மலைமேலிருந்துவிழும் அருவிக்கூட்டங்களும், இன்னும் பற்பல விதமான காட்சிகளும் ஜகதீசனுடைய மனமெலிவையாற்றி யுற்சாகமுண்டாக்கின. ஜகதீசன் இந்தக்காட்சிகளால் மனமகிழ்ந்து, இதைவிட வேறு இடங்கள் தபசுக்கு யோக்கியமானது எங்கும் அகப்படுவது அருமையென்று கருதி, அம்மலைபருகில் துஷ்டமிருகங்களேறுவதற்கருமையான ஒரு பெரிய பாறையானது நாலுபக்கங்களிலுமிருந்து குளிர்ந்த நிழல் செய்துகொண்டிருக்கும் விருட்சங்களாலும், தெளிந்து சறுத்துச் சலசலவென்று தொனியோடும் ஓடிக்கொண்டிருக்கும் அருவியாற்றினாலும் சூழப்பட்டு விளங்குவதுகண்டு, இதுவே நமது கருத்தை முற்றுவிக்கத்தக்கவிடமென்று மகிழ்ந்து, அருவியாற்றில் ஸ்நானம்செய்து, தன் தந்தையின் திருவடிக்கமலங்களைத் தியானித்து, எங்கும் நிறைந்த பரமானந்தப் பேரொளியாகிய ஆண்டவனைச் சிந்தித்துக் கல்மலைபோல அசைவற்றுத் தன்னை மறந்து, யாவராலுஞ் செய்வதற்கரிய கொடிய தவஞ்செய்தான். இப்படி

யாறுமாதங்கள் கடந்த பின்பு, ஒருநாள் தன் கண்களைத்திறந்துபார்க்கையில், கன்னங்கரேலென்று கறுத்துப் பருத்துயர்ந்த சரீரமும், பனைமரம் போல நீண்டு இரண்டு கைகளும், குகைபோலக்காணப்பட்ட வாயும், நெருப்பைப்போல எரிந்துகொண்டிருக்கும் பெரிய கண்களையுமுடைய ஒரு பெரியவுருவந்தோன்றக் கண்டு சற்றுக்கலங்கி, நாமின்றைக்கு இதற்கு இரையாகுங்காலம் நேரிட்டது. நமது எண்ணங்களெல்லாம் நிலைகுலைந்தன. இனிச்செய்வதொன்றுமில்லை. இச்சமயம் நமது தெய்வம் மனமிரங்கிக் காப்பாற்றினாலன்றித் தப்பும்வழி வேறில்லை. நாமென்னசெய்யலாம்? விதிப்படி நடப்பது நடக்கட்டுமென்று தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, ஈசன் திருவடியை மறவாமல் அசைவற்றுநின்றான். அப்பொழுது அந்தப் பயங்கரமான வடிவம் கிட்டவந்து, அதட்டி நீயாரடா? ஏனிங்குவந்தாய்? சீக்கிரஞ்சொல்லென, ஜகதீசன் பயப்படாமல் கலகலவென்று நகைத்தான். அந்தப்பூதம் நீ யாரடா? என்னைக்கண்டு சிறிதும் அஞ்சாமல் சிரிக்கிறாய்? என்னை அலட்சியம் செய்கிறாய்? சிரித்தகாரணமென்ன? சொல் எனச் ஜகதீசன் வேறொன்றுமில்லை; என்னிலைமையைக் குறித்துச் சிரித்தேன் என்று தன் வரலாறு கூறிக்கலக்கமற்றிருக்கும்போது, அது தனது நீண்ட கைகளால் அவனைத் தூக்கிக்கொண்டு மலையுச்சிக்கு அதிக சீக்கிரமாகப் பாயக்கண்ட ஜகதீசன் கர்த்தனை தியானித்துத் தன் செயலற்றுத் தன்னை மறந்திருந்துவிட்டான். பிறகு ஒருநாழிகை கழிந்து தன்கண்ணைத் திறந்து பார்க்கையில் தான் ஒருபோதும் பார்த்தும் கேட்டுமறியாத விசித்திர விநோதமான ஒரு மாளிகையில் தானிருக்கவும், தனக்கெதிரில் பொற்பிரம்பு கையிற் பிரகாசிக்கவும், காலிற் பாதகுரடு துலங்கவும், கருணை சுரந்த முகாரவிந்தமும், நீண்டுபரந்த கண்களும், இளநிலாவெறிக்கும் புன்னகை ஒளியும், வெயிலொளிவிரிக்குஞ் சொர்ணத்திருமேனியும், செவ்வானமொத்துப் பிரகாசிக்கும் காவிகாம்பரமும், விளங்க நிற்குந்தெய்வ வடிவைக்கண்டு, சிந்தை மகிழ்ந்து, திடீரென்றெழுந்திருந்து, அவர் திருவடிகளில் விழுந்து ஏழைக்கிரங்கி யாதரிக்கவந்த அருளானந்த வடிவமே யடைக்கலம், அடைக்கலம்; மாயப்பிரபஞ்சவாழ்வில் மதிமயங்கித் திரியும் ஏழைமதியாளர்கள் உண்டு, இல்லையென்று வழக்கிடவிருக்கும் பரிபூரணானந்தப்பொருளே யடைக்கலம், அடைக்கலம்; பிராணபயங்கொண்டு செய்வகையற்று மயங்கிச் சாவுக்குத்துணிந்து மயங்கிக்கிடந்த சிற்றறிவுடைய சிறியேனைக் காத்திரட்சிக்கவந்த கருணைக்கடலே அடைக்கலம், அடைக்கலம்; என்னைத்தொண்டு கொண்டாதரிக்கவேண்டுமென்று நமஸ்கரித்தவுடனே அவர் தமது திருக்கரங்களால் அவனையெடுத்துத் தழுவித்

தமது தாமரைமலர்போன்ற திருக்கரங்களால் சரீரத்தைத் தடவி யிளைப் பொழித்த மாத்திரத்தில், களைதெளிந்து தன் திருமேனி தளிர்த்துத் தங்க மயமாக விளங்கக்கண்டு மகிழ்ந்து சந்தோஷத்தினலொன்றுந் தோன்ரு மல் நின்ருன். அப்பொழுது பெரியவர் குழந்தாய்! உன்னுண்டவன் உன்னை க்காப்பார ! நீ பயப்படாதே ! நானிந்த மலையில் வசிக்கிற சித்தன், உன் தபசுக்குமெச்சிய உன் தெய்வமானது உனக்குபதேசஞ் செய்யும்படி எனக் குக்கட்டளை யிட்டபடியால் அஷ்டமகாசித்திகளையு முனக்குக் கற்பிக்கும் பொருட்டு வந்தேன். உன்னுடைய மனநிலையைச் சோதிக்கும்பொருட்டு பூதவடிவம்காட்டிப் பயமுறுத்தினேன். இனியுனக்கொரு குறைவுமில்லை. உன் எண்ணமெல்லாம் சித்தித்தது என்று கூறி யாசீர்வதித்து, இந்தமா ளிகையிலிருந்து நானுபதேசிப்பதைச் சிந்தித்துக்கொண்டு கவலையற்றிரு; இன்னம் ஆறுமாதங்கள் சென்றதும் நீ நடக்கவேண்டிய வழிசொல்லுகி றேன் என்றருள் புரிந்து அன்று முதலாகச் சித்திகளுக்குரிய மந்திரங்க ளையும் பிரயோகிக்குந் தந்திரங்களையும் முறையே கற்பித்துவந்தார்.

தேவகுஞ்சரியம்மாள்

---

## ஸிம்பலைன்.

### 5-ம் அத்தியாயம்.

---

இதுகழிந்த சிறிதுநாளில் **பாஸ்துமஸ்-ும் பிலாரியோவும் ரோமாபுரி** யில் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள்.

**பாஸ்துமஸ்.**—நீ ஏன் பயப்படுகிருய்? என் மனைவியின் கற்பில் எவ்வளவு நம்பிக்கையிருக்கிறதோ அதேமாதிரியாக அரசனைக் கைக்குள்ளாக் குவேனென்ற நம்பிக்கையுண்டு.

**பிலாரியோ.**—அதற்கு என்ன உபாயம் எடுக்கப்போகிருய்?

**பாஸ்து.**—உபாயமொன்றுமில்லை; என்னுடைய காலதோஷத்தினல் இவ்வி தம் நேரிட்டது. இந்தக்காலம் கழிந்தால் அரசன் என்னைப் பிரியத் துடன் ஆதரிப்பான்.

**பிலாரி.**—இதற்கு முன் உன்னுடைய அரசன் இவ்வூர் சக்கரவர்த்தியைப் பற்றி கேள்விப்பட்டிருப்பான். அவனுடைய ஸ்தாளுதிபதியாகிய **கேயஸ்லூஷியஸ்** இங்கிலாந்துக்குப்போய்க் கப்பத்தைக்கேட்டு அவர் கள் கொடுக்காமற்போனல் நிச்சயமாய் யுத்தம் நேரிடுமென்று தோன்றுகிறது.

**பாஸ்து.**—ஆனல் நான் நடக்கப்போகிற சங்கதியைச் சொல்லுகிறேன். எங்களுடைய அரசன் கப்பங்கொடுக்கமாட்டேனென்று சொல்வான், அதினல் உடனே சண்டையுண்டாகும், நாங்களோ முன்னிருந்த ஸ்திதி

யைப்பார்க்கினும் இப்பொழுது யுத்த விஷயத்தில் அதிகத் தேர்ச்சி யடைந்திருக்கிறோம். ஆகையால் எங்களுக்கு வெற்றிகிடைக்குமே தவிர தோல்வியில்லை. நிச்சயமாய் நினைத்துக்கொள்.

பிலாரி.—இதோபார் இயாக்கிமோ வருகிறான் (இயாக்கிமோ வருகிறான்)

பாஸ்து.—இவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிட்டாயா! உலகத்திலுண்டான காற்றெல்லாம் உன் கப்பலிலடித்து உன்னைச் சீக்கிரம் கொண்டு வந்ததுபோல் தோன்றுகிறதே!

பிலாரி.—க்ஷேமம்தானா?

பாஸ்து.—நீ வந்ததுரிதத்தைப்பார்த்தால் இமோஜன் சீக்கிரம் பதில்சொல் லிவிட்டாளென்று தோன்றுகிறது.

இயாக்.—உன்னுடைய பத்தினியைப்போல உலகத்தில் அதிக ரூபவதியை நான் இதுவரையில் கண்டதேயில்லை!

பாஸ்து.—ரூபவதிமாத்திரமா! பதிவிரதையும் கண்டதில்லையென்று சொல். ஏன் பின்வாங்குகிறாய்? அவள் பதிவிரதையில்லையானால் அவளுடைய அழகு மற்றவர்களுடைய இருதயத்தைக் கவர்ந்து தன்னை அவமானப்படுத்தக்கூடிய ஒரு ஸாதனமாக உபயோகப்படட்டும்.

இயாக்.—உனக்கு இதோ கடிதங்கள் கொண்டுவந்திருக்கிறேன், பார்.

பாஸ்து.—நல்ல செய்திதானா?

இயாக்.—அவ்விதமிருக்கலாம்.

பிலாரி.—நீயங்கே இருக்கும்போது கேயஸ்லூஷியஸ் வந்தாய்விட்டதா?

இயாக்.—அவனை யெதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள் இன்னும் வரவில்லை.

பாஸ்து.—நல்லதுதான் இந்த மோதிரம் முன்போல பிரகாசிக்கிறதா? அல்லது நரி திராக்ஷப்பழம் புளிக்கும், எனக்கு வேண்டாமென்று சொன்னதுபோல, இந்த மோதிரமும் உன் கைக்குச் சரியாயில்லை, வேண்டாமென்று சொல்லுகிறாயா?

இயாக்.—நான் தோற்றுப்போனேனானால் இந்தமோதிரத்தைமாத்திரமல்ல, நான் வைத்த திரவியத்தையும் தோற்றுப்போவேன், இமோஜன் வசிக்கிற இடம் இன்னும் பத்துபங்கு தூரத்திலிருந்தால்தான் என்ன? மோதிரத்தை ஜெயித்தேன். உண்மையைச் சொல்லுகிறேன்.

பாஸ்து.—வைரம் கடினமாயிருப்பதுபோல, அதை ஜெயிக்கிறதும் அதிக வருத்தமாயிருக்கும்.

இயாக்.—உன்னுடைய பத்தினி பதிவிரதையல்ல; அப்படியிருக்க, உன்னுடைய வைரத்தை ஜெயிக்கக் கொஞ்சமாகிலும் பிரயாசப்படவேண்டாம்.

**பாஸ்து.**—பந்தயம் தோற்றுப்போனதினால் விளையாட்டாக வார்த்தை சொல்லாதே. இன்றுமுதல் நாமிருவரும் இஷ்டர்களாயிருக்கக்கூடாதென்றும் நம்புகிறேன்.

**இயாக்.**—நல்லது, நீ உடன்படிக்கையில் சொன்னபடி நடக்கவேண்டுமானால் நாம் எப்பொழுதும் இஷ்டர்களாயிருக்கவேண்டும். அவளுடைய கற்பை யழிக்காமற்போனால் உடன்படிக்கைப்படி நாமிருவரும் சண்டைசெய்யவேண்டும். ஆனால் நான் அவளுடைய பதிவிரதாதருமத்தைக் கெடுத்துவிட்டேன். இது நிச்சயம். ஆகையால் இந்த மோதிரத்தையும் ஜெயித்தேன், அதை எடுத்துக்கொள்ளுகிறேன். ஆனால் உனக்காவது அவளுக்காவது நான் ஒரு துரோகமும் செய்யவில்லை. ஏனென்றால் உங்களுடைய சம்மதியின்பேரில்தான் நான் அங்கே போய் அவள் கற்பையழித்தேன்.

**பாஸ்து.**—நீயவள் கற்பையழித்ததற்கு ருஜுக்காட்டினால் இந்தமோதிரத்தை உனக்குத் தந்துவிடுகிறேன், நாமும் இஷ்டர்களாயிருக்கலாம். அப்படியில்லாமற்போனால், அவளுடைய களங்கமற்ற பதிவிரதாதருமத்தைப்பற்றி இழிவான அபிப்பிராயம் கொண்டதற்காக, நாமிருவரும் சண்டைசெய்து, என் கத்தியினால் உன்னைவெட்டி, உன் கத்திக்கு எஜமானனில்லாமற்போகவேண்டும், அல்லது உன் கத்தியினால் என்னை வெட்டி, என் கத்தி தன் எஜமானனையிழக்கவேண்டும்; இவ்விரண்டும் தவறினால், இருவர்களும் ஒருவரையொருவர் கொன்று, கத்திகளை யாராவது எடுத்துக்கொண்டு போகவேண்டும். ஆகையால் அடையாளங்களுண்டானால் சொல்.

**இயாக்.**—அங்கே நடந்த வரலாற்றை நான் சொன்னால் உனக்கு அது நிச்சயமென்று தோன்றி யென்னை நம்பலாம், வேணுமானால் அவைகள் வாஸ்தவமென்று சத்தியம் செய்கிறேன். ஆனால் நான் சத்தியம் செய்யும்படி நீ சொல்லவேண்டாம், ஏனென்றால் நான் சொல்வதெல்லாம் நிஜமென்று உனக்கே தெரியும்.

**பாஸ்து.**—வரலாற்றைச் சொல்.

**இயாக்.**—முதலில் அவளுடைய படுக்கையறையைப் பற்றிச் சொல்லுகிறேன். அதில் நான் தூங்கினேனென்று சொல்லவில்லை. ஏனென்றால் அதின் அழகைப்பார்த்துக்கொண்டிருந்தால் தூக்கம் எவரையும் விட்டோடிப்போம். அந்த அறையில் பட்டினாலும் வெள்ளியினாலும் அலங்கரித்த படுதாக்கள் தொங்கவிட்டு அதில் கிளியோப்பாட்ரா தன் பர்த்தாவாகிய அன்டோனியைச் சந்தித்ததையும், ஸிட்னஸ் என்ற நதி

அதிகப் பிரவாகத்துடன் போவதையும் எழுதியிருந்தது. அந்த வேலையைத்தான் புகழவேணுமோ அல்லது படம் எழுதவேண்டிய கருவிகளைத்தான் புகழவேணுமோவென்று சந்தேகப்படும்படியாய் அவ்வளவு நேர்த்தியாக எழுதியிருந்தது. அதைப்பார்த்தால் மேற் சொல்லிய இருவர்களும் உயிருடனிருந்து சந்தித்ததுபோலவும் வாஸ்தவமாயுள்ள ஒரு நதி பிரவாகத்துடன் ஓடுவதுபோலவும் காணப்பட்டது.' அதை எழுதினவனைப் புகழ்ந்தால் மாத்திரம் போதாது. தெய்வத்தைப்போல பூஜிக்கவேணும்.

பாஸ்து.—ஆ, ஆ! நீ சொல்வது உண்மைதான் இதை நான்தான் இங்கே சொல்லிக் கேட்டாயோ. அல்லது வேறே யாராவது சொல்லிக்கேட்டாயோ?

இயாக்.—அப்படியானால் நான் சொன்னதை ருஜுப்படுத்த வேறே அடையாளங்கள் வேணுமா?

பாஸ்து.—வேறே அடையாளங்கள் வேண்டியது அவசியம்தான்; இல்லாமற்போனால் உன் யோக்கியதை கெட்டுப்போம்.

இயாக்.—அந்த அறையின் தென்புறத்தில் புகைபோகிறதற்கு ஒருகூண்டு இருக்கிறது. அதில் பதிவிரதையாகிய டையான் என்பவள் தன் தோழிகளுடன் குளித்துக்கொண்டிருக்கிற காக்ஷியைவரைந்திருக்கிறது. அதைப்பார்த்தால் ஒருவரோடொருவர் வார்த்தை சொல்லிக்கொண்டு குளிக்கிறதுபோலக் காணலாம். அதை எழுதினவன் அந்தப் படத்துக்குப்பேசவும் அசையும்படியான சக்தியையும் கொடுத்திருந்தால் அவனை தெய்வமென்றே சொல்லலாம். அது இல்லாததினால் அவனை இரண்டாவது தெய்வமென்றுரைக்கவேணும்.

பாஸ்து.—அது பெயர் பெற்றதாயிருப்பதாலும், அதை யாவரும் புகழ்ந்துரைப்பதாலும் உன்னிடத்திலும் யாராவது சொல்லியிருப்பார்கள். அதையென்னிடத்திலுரைக்கிறாய்; உன்னை நம்பமாட்டேன்.

இயாக்.—மேலிடத்தைப்பார்த்தால் அதிக் விசேஷமாயிருக்கின்றது.

பாஸ்து.—இவைகளைச் சொன்னதினால் அவளுடைய கற்பழிந்துவிட்டதென்கிறாயா! நீ சொன்னவற்றையெல்லாம் நீயே பார்த்ததாகவைத்துக்கொள்வோம். உன்னுடைய ஞாபகசக்தியைப்பற்றி அதிகமாய்ப் புகழவேண்டியதுதான். அந்த அறையிலுண்டான அடையாளங்களைச்சொன்னதினால் நீ பந்தயத்தில் ஜெயித்துவிட்டாயோ? நான் சம்மதிக்கமாட்டேன்.

இயாக்.—(காப்பை எடுத்துக்காட்டி) இதைக்கண்டவுடன் பயப்படாதே! தயவுசெய்து இதை உன் கண்குளிரப்பார்த்துக்கொள்; நான் திரும்ப

எடுத்துக்கொள்ளுகிறேன் (தன் கையில் போடுகிறான்.) இந்தக் காப்புக்கு உன் மோதிரத்தைக் கலியாணஞ்செய்து கொடுக்கவேணும். ஆகையால் இரண்டையும் நான் வைத்துக்கொள்ளுகிறேன்.

**பாஸ்து.**—நான் அதை இன்னும் ஒருதரம் பார்க்கட்டும், தெய்வமே, நான் அவளைவிட்டுப் பிரிகிற சமயத்தில் என்னை ஞாபகப்படுத்தும்படியாய் ஒருகாப்பைக் கொடுத்தேன், அந்தக் காப்பு இதுதான்.

**இயாக்.**—ஏ பாஸ்துமஸ்! அவளுக்கு வந்தனமளிக்கின்றேன். இந்தக் காப்பை நான் பெரிதாக நினைக்கவில்லை; ஆனால் அவள் அதைத் தன் கையிலிருந்து எடுத்து என்கையில் போட்ட செய்கை அதிக விசேஷமானது; அதை நினைக்கிறபோது இப்பொழுதும் அவள் என் முன்பாக நின்று என் கையில் போடுவதுபோல் தோன்றுகிறது. அவள் அதை என் கையில் போடுகிற சமயத்தில், ஒருகாலத்தில் அந்தக்காப்பை விசேஷமாக நினைத்தேனென்று சொன்னாள்.

**பாஸ்து.**—ஒருவேளை யென்னிடத்தில் தரும்படியாய் அதையெடுத்து உன் கையில் கொடுத்திருக்கலாம்.

**இயாக்.**—அவள் அனுப்பிய கடிதத்தில் அவ்விதம்தான் எழுதியிருக்கிறாளா?

**பாஸ்து.**—ஓ, இல்லை, இல்லை, நீ சொன்னது உண்மைதான், நான் நம்புகிறேன், இதையும் எடுத்துக்கொள் (மோதிரத்தைக் கொடுக்கிறான்). அது என் கண்ணுக்கு ஒரு கடும்விஷம்போல் தோன்றுகிறதே! அதைப்பார்த்தமாத்திரத்தில் என்னுயிர்போகிறதே! நண்பர்களே! அழகுள்ள இடத்தில் சுத்தம் இருக்குமென்றும், பகட்டாயிருக்கிற இடத்தில் உண்மைகாணலாமென்றும், அயலானிருக்கிற இடத்தில் பத்தினி விசுவாசமாயிருப்பாளென்றும், சொப்பனத்திலும் நம்பாதேயுங்கள். ஸ்திரீகளின் கற்பழிவதுபோல அவர்களுடைய பர்த்தாவுக்கு விசுவாசமாயிருக்கிறேனென்ற வாக்கும் நம்பக்கூடாததாயிருக்கிறது. "அத்திப்பூவைக்கண்டாலும் காணலாம், வெள்ளைக்காக்கையைக் கண்டாலும் காணலாம், ஜலத்தில் மீன்காலைக்கண்டாலும் காணலாம், ஸ்திரீகளுடைய இருதயத்தைமாத்திரம் காணக்கூடாது." மேலும், "ஆலகால விஷத்தையும் நம்பலாம், ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம்; கோலமாமதயானையையும் நம்பலாம், கொல்லும் வேங்கைப்புலியையும் நம்பலாம்; காலதூதர்களையும் நம்பலாம், கள்ளர் திருடர், முரடர்களையும் நம்பலாம்; சேலைகட்டிய மாதரை நம்பினால், தெருவழி நின்று திகைத்து நிற்கலாம்."

**பிலாரி.**—ஐயா, பொறுத்துக்கொள்ளவேணும். பாஸ்துமஸ்! உன் மோதிரத்தை, திரும்பவும் எடுத்துக்கொள். இயாக்கிமோ இன்னும் அதை

ஜெயிக்கவில்லே. ஒருவேளே இமோஜன் அதைத் தவறவிட்டிருக்க லாம்; அல்லாமற்போனுல் அவளுடைய தோழிகளில் ஒருவருக்கு லஞ்சம்கொடுத்து அவளேக் கைவசப்படுத்தி, அவள் இமோஜனிடத் திலிருந்து திருடிக்கொண்டு இவன் கையில் ஏன் அதைக் கொடுத்தி ருக்கக்கூடாது? ஆகையால் அவன் சொல்வதை நம்பவேண்டாம்.

பாஸ்து.—வாஸ்தவந்தான். நீ சொன்னபடி அவன் கையில் கிடைத்த தென்று நான் நம்புகிறேன். இயாக்கிமோ, மோதிரத்தை திரும்ப என்னிடத்தில்தா; நீ சொல்வதை நம்பமாட்டேன். அவள் உடம்பி லுள்ள இதைப்பார்க்கிலும் அதிக விசேஷமான ஓர் அடையாளத் தைச்சொல். இந்தக்காப்பை யாராவது திருடிஉன்கையில் கொடுத்தி ருக்கலாம் நான் நம்பமாட்டேன்.

இயாக்.—பிரகஸ்பதியின்பேரில் ஆணேயிடுகிறேன். அவள் கையிலிருந்து தான் எனக்குக்கிடைத்தது.

பாஸ்து.—பார்த்தாயா அவன் ஆணேயிடுகிருன், பிரகஸ்பதியின்பேரில் ஆணே யிடுகிருன். வாஸ்தவந்தான்; எனக்கு இந்தமோதிரம் வேண்டாம் நீயே வைத்துக்கொள். வாஸ்தவம், அவள் தவறவிட்டிருக்கமாட் டாளென்பது எனக்கு நிச்சயந்தான். அவளுடைய தோழிகளும், வேலேக்காரிகளும் அதிக விசுவாசமுள்ளவர்கள். அவள் விஷயத்தில் துரோகம் செய்யமாட்டார்கள். இதைத் திருடும்படி அவர்களிடத் தில் சொல்லி அவர்கள்கேட்கவா! மேலும் ஒருஅன்னியன் சொல்லி அவர்கள் கேட்கவா!! எனக்குக் கொஞ்சமாகிலும் நம்பிக்கையில்லே. இது உண்மையே. அவள் கற்பழிந்ததின் அடையாளங்கள் இதோ இருக்கின்றன. இவ்வளவு வருத்தப்பட்டு, தான் பதிவிரதையல்ல வென்ற அபகிர்த்தியைப் பெற்ருள். இயாக்கிமோ, நீ செய்த தொழிலுக்குக் கூலியாக மோதிரத்தை யெடுத்துக்கொள், பிசாசுக் கூட்டங்களெல்லாம் உனக்கும் இமோஜனுக்கும் துன்பத்தைத் தரட் டும்.

பிலாரி.—ஏ, பாஸ்துமஸ்! அவசரப்படவேண்டாம், பொறுக்கவேணும். நாம் அதிக விசேஷமாய் நினேத்துக்கொண்டிருந்த உன் பத்தினியின் கற்பழிந்ததென்று இந்த அடையாளங்களினுல் ஸ்தாபிக்கமுடியாது.

பாஸ்து.—அதைப்பற்றி இனிமேல் என்னிடத்தில் பேசாதே. இவன் அவ ளேக் கைவசப்படுத்தி அவள் கற்பை யழித்துவிட்டான்..

இயாக்.—நான் சொன்னவற்றை நம்புகிறதற்கு வேறேவித அடையாளங் கள் வேணுமானுல் சொல்லுகிறேன் கேளுங்கள். அவளுடை மார்

புக்கு அடியில் ஒரு மறு இருக்கிறது. அது உனக்கு ஞாபகமிருக்கிறதா?

பாஸ்து.—நரகத்தைப் பார்க்கிலும் அதிகப்பெரிதாகவுள்ள வேறொரு மாசு அவளிடத்திலிருக்கிறதாக ஸ்தாபிக்கிறது.

இயாக்.—இன்னும் திருப்தியாகவில்லையா! வேறேவித அடையாளங்கள் வேணுமா?

பாஸ்து.—போதும்; நீ சொன்னவற்றை நம்பினேன்.

இயாக்.—ஆணையிடுகிறேன்.

பாஸ்து.—ஆணையிடவா? நீ அப்படி செய்யவில்லையென்று சத்தியம் செய்தாலும் நீ பொய்சொல்லுகிறதாக நினைப்பேன். நீ அவளுடைய கற்பையழிக்கவில்லையென்று சொன்னால் உடனே நான் உன்னைக் கொல்லுவேன்.

இயாக்.—நான் சொன்னவற்றை இல்லையென்று சொல்லமாட்டேன்.

பாஸ்து.—ஐயோ, அவள் இப்போது இங்கேயிருந்தால், கண்டதுண்டமாய் வெட்டிப்போடுவேன்! அரண்மனைக்குப்போய் அவள் தகப்பன் முன்பாக, சித்திரவதை செய்கிறேன். வேண்டாம் நான் வேறேவித ஏற்பாடுகள் செய்கிறேன். என்று சொல்லிப்போய் விட்டான்.

அப்பொழுது பிலாரியோ,இயாக்கிமோவைப்பார்த்து பாஸ்துமஸுடைய கோபம் அளவுக்குமிஞ்சிவிட்டது,நீ பந்தயத்தில் ஜெயித்துவிட்டாய்;பாஸ்துமஸைச் சமாதானப்படுத்துவோமென்று சொல்லி இயாக்கிமோவைக் கூட்டிக்கொண்டுபோனான்.

V. கோபால அய்யங்கார் பி.எ.

---

## புற்புலத்துநெட்டிலிங்கமையர் வைபம்

180-வது பக்கத்தொடர்ச்சி.

---

இவ்வளவு செல்வாக்கும், உத்தியோக தோரணையும் சாமர்த்தியமுமுள்ள தனது அக்காள் புருஷன் சாமவய்யரிடந்தான் நெட்டிலிங்கம் வளர்ந்தது. அவன் செல்வத்துக்கும் சொல்லவேண்டுமா. அவன் அக்காள் அவனை சர்வவிதத்திலும் செவ்வையாக வளர்த்துவந்தாள். வீட்டில் சேவகர்கள் முதலிய சிப்பந்திகள் அரைநாழி நெட்டிலிங்கத்தை விட்டுப்பிரியாமல் ஒருவன் மாற்றி ஒருவன் அவனிடம் காத்திருப்பான். குழந்தைகோலியாடுதல், பந்தடித்தல், பேய்ப்பந்து பிள்ளையார்ப் பந்து முதலிய விளையாட்டுகள் விளையாடும்போது ஒரு ஆள் கூட இருந்துகொண்டேயிருப்பான்;

சாமுவய்யர் அழைத்துவந்த நல்வேளேயோ அல்லது வக்கமய்யர் வம்சத்தின்வாசனேயோ அல்லது இந்த இரண்டுகாரணங்களோ நெட்டிலிங்கம் எல்லாவிதத்திலும் தேர்ச்சியடைந்தான். எந்தப்பந்தாட்டமாயிருந்தாலும் சரி ஒரு பையனுவது அவன்முன் நிற்கமுடியாது. ஒரே அடியில் பேய்ப்பந்தில் ஒரு ஆளேவிழுக்காட்டுவான். இரட்டைநாடிதேகமாயிருந்தாலும் தென்னேமரம் 100 அடி உயரமுள்ளதில் ஒரு நொடியில் ஏறி இளநீர் குடிப்பான். பெரிய மனிதன் வீட்டுப்பிள்ளே என்று ஒருவனும் என்னதான் இவன் விஷமம் செய்தபோதிலும் தண்டிக்கமாட்டார்கள். கொள்ளடத்தில் பிரவாககாலத்தில் இக்கரையிலிருந்து அக்கரைக்கு ஒரு நாழிகையில் நீந்திப் போய் திரும்பி வருவான்.

விளேயாட்டில் எப்படியோ; அதே பிரகாரம் படிப்பிலும் ஒருதடவை சொல்லிக்கொடுத்தால் போதும்எல்லாவற்றையும் பிடித்துக்கொள்ளுவான் இவனது கூர்மையானபுத்தியைக்கண்டு மெச்சாதஉபாத்தியாயர்கள் கிடையவேகிடையா. சாமுவய்யர் தனக்கு ஒழிந்தவேளேகளில்அக்காலத்தில்உத்தியோக முறைமைக்கு வேண்டிய மகா ராஷ்டரக்கணக்குகள் சொல்லிக்கொடுப்பார். அவைகளே ஒருதடவையில் பிடித்துக்கொள்ளுவான். அவருக்கு வெகு சந்தோஷம். நாம் எடுத்துவளர்க்கும் குழந்தையிவ்வளவு புத்திமானு என்று செருக்கடைவார். அவருடையசமுசாரம் அதை அறிந்தால் உடனே புலிக்குப்பிறந்தது பூனேயாமா; நெட்டிலிங்கம் வக்கமய்யன் வம்சமில்லேயா? என்பாள் பார்ப்பதற்குவெகுலட்சணமாகவும்படிப்பில்அவ்வளவுகூர்மையாகவுமிருந்ததை எந்த நிமிஷம் சாமுவய்யர் கண்டாரோ அதே நிமிஷத்தில் தன்னுல்கூடிய பிரயத்தனங்கள் ஒன்றுவது குறைவில்லாதிருக்க தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், மகாராஷ்டரம், கன்னடம் ஹிந்துஸ்தானி இவ்வளவு பாஷைகளிலும் நெட்டிலிங்கத்துக்கு உபாத்தியாயர்களே நியமித்துவிட்டார். இத்தனே பெயர்கள் மத்தியிலும் வெங்கலக்கடையில் யானேபுகுந்து புறப்படுவதுபோல் நெட்டிலிங்கம் புறப்படுவான். சுருக்கிச்சொல்ல இவன் 16 வயதாவதற்கு முன் இவன் அக்காலத்திய உத்தியோக முறைக்கு வேண்டியஎல்லாவித்தைகளேயும் அப்பியசித்துவிட்டான். இங்கிலீஷ் ஒன்று அக்காலத்தில் இப்போதிருப்பதுபோல் பிரபலமாய்க்கிடையாது. அக்காலத்திய உத்தியோகத்துக்கும் அது அவசியமுமில்லே. அது ஒன்று நீங்கலாக நெட்டிலிங்கம் மற்ற எல்லா வித்தைகளேயும் கற்று சர்க்கார் வேலேக்கு சரியான ஆசாமியானுன். குழந்தைப் பருவத்தாலும் சாமுவய்யர் வளர்த்துவந்த செல்வத்தாலும் நெட்டிலிங்கத்துக்கு வறுமை என்பதே தெரியாமலிருந்தது. அன்றியும் சாமுவய்யரிடம் பழகப்பழக அவனுக்கு ஸ்வ

பாவமாயுள்ள குலகுணங்கள் தனக்குத்தானாகவே வந்துவிட்டன. கடுகு சிறுத்தால் காரம். போகுமா? புலிக்குப் பிறந்து பூனையாவானா? வக்கமய்யர் வம்சத்திலல்லவோ நெட்டிலிங்கம் உதித்தது. 16-வயதானவுடன், தனக்கு அக்காலத்தில் உத்தியோகத்துக்கு வேண்டிய சகல விததேர்ச்சிகளும் வந்துவிட்டதை நெட்டிலிங்கம் கண்டுகொண்டான். அன்றியும் என்னதான் அதிக அன்புடன் சாமுவய்யரும் தன் அக்காளும், தன்னைப் பிள்ளைக்குமேல் பிள்ளையாக பாவித்து வளர்த்துவந்தபோதிலும் தன்னைப் பெற்ற தகப்பனும் இன்னும் மற்றுமுள்ளவர்களும் வறுமையின் கொடுமையால் புற்புலத்தில் அவஸ்தைப்படுவதை அறிந்துகொண்டான். இனி நாமே முயன்று நமது குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று நெட்டிலிங்கத்துக்கு எண்ணம் வந்துவிட்டது. இதை சமயம்பார்த்து தனது அக்காளுக்கும் அக்காள் புருஷனுக்கும் தெரிவிக்கவே அவர்கள் பையன் தீரத்தனத்துக்கு மெச்சினார்கள். அவனை அவர்கள் தங்கள் பிள்ளையாய் பாவித்தபடியால் தங்கள் சொந்தப் பிள்ளையே தான் ஸ்வயமாக சம்பாதிக்க முயன்றதாக எண்ணி அதிக தூரத்தில் குழந்தையை அனுப்பிவிடக்கூடாதென்று தங்களுக்கு சமீபத்திலேயே வைத்துக்கொள்ள எத்தனித்து சமயம்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சாமுவய்யர் பழையநாள் மனிதராயிருந்த போதிலும் எல்லாவிதத்திலும் கெட்டிக்காரர். சில தாய்தந்தைகள் தங்கள் பிள்ளைகள் தூரதேசமாவது அல்லது குடும்பத்தைவிட்டுப் பிரிந்து தனிமையில் சம்பாதிக்கவாவது முயன்றால், ஐயோ! குழந்தைக்கு இன்னும் வயதாகவில்லை. கொஞ்சகாலம் போகட்டும் என்பார்கள் அல்லது ஐயோ தன்னைவிட்டுப்போகிறதே குழந்தை என்று கோழை மனதுடன் அழுது நிற்பார்கள். இவைகள் அவலட்சணக்குறிகள். சாமுவய்யர் அம்மாதிரிப் பைத்தியக்காரர்களினத்தைச் சேர்ந்தவரல்ல. வெகு கெட்டிக்காரர். எந்தநிமிஷத்தில் குழந்தை தனிமையில் சம்பாதிக்கவேண்டுமென்று அவா கொண்டானோ அந்த நிமிஷத்திலேயே அவனது மேலான புத்தியைமெச்சி, எடுத்துவளர்த்த அருமையாலும் அவனைவிட தனக்கு உலகத்தில் வேறு பிடிப்பில்லாத படியாலும் தனக்கு சமீபத்திலேயே ஒருவேலை பண்ணிவைக்க தன்மனத்திற்குள் எத்தனித்துவிட்டார். அதற்கு முன்னதாக தன் அன்பில் ஒருவித குறைவுமில்லாமலிருக்க தனது தமையனார் குமாரத்தியை அவனுக்கு மணம்புரிந்துவைத்தார். நெட்டிலிங்கத்திற்கு அவன் அதிர்ஷ்டத்துக்கும் புத்திக்குமமைந்தபடி அவன் தாரமும் அமைந்தது. இந்த அம்மணியின் பெயர்தனோதயம். ரூபத்தில் ரதி என்றே சொல்லவேண்டும். குணத்திலோ ரூபத்தில் எப்படியோ அப்

படியேயிருந்தாள். தனது குடும்பத்தைச்சேர்ந்தஒவ்வொருவருக்கும் அவரவர்கள் மனதுக்கிசைந்தபடி நடப்பாள். இந்தக் கலியாணம் நடந்த 3 வருஷங்களுக்கெல்லாம், அதாவது தனேதயம் பெரியவளாய் தன்புருஷனுடன் வாழும்காலம் வந்தநாள் துடங்கி செட்டிலிங்கத்துக்கு 19-வது வயதில் சாமுவய்யர் தான் உத்தியோகம் பண்ணும் சிகாழி என்னும் ஊரில் அவனுக்கு ஒரு வேலை 6 ரூபாய்க்குப் பண்ணிவைத்தார். அவன் அதை அனந்தமாக எண்ணி என்றையதினம் தனக்கு வேலையாயிற்றோ அன்றைமுதல் தனிமையில் தனது குடும்பபரிபாலனம் செய்ய ஆரம்பித்தான்.

மாதர்மித்திரன்

## கற்பு

சரீரத்திற்கு சிரசு பிரதானமாயிருக்கிறதுபோல் நமக்கு சகல குணங்களிலும் கற்பு நிலையே முக்கிய ஆபரணமாயிருக்கிறது. இந்த கற்புநிலை தவறுதவள் முகசவுந்திரிய மில்லாதிருந்தபோதிலும் அவள் யாவராலும் புகழப்படுவாள். கற்புநிலை தவறினவள் மிகுந்த அழகுள்ளவளாயிருந்தாலும் அவள் யாவராலும் இகழப்படுவாள். ஆகையால் நாம் நம்முடைய புருஷரைத் தெய்வமாக எண்ணியும் அன்னிய புருஷர் முகம் பாராமலும் "கற்புநிலை தவறுது காப்பாள் பதிவிரதை" என்ற மூத்தோர் சொல்லுக்கிணங்க கண்ணை இமை காப்பதுபோல் நமது பதிவிரதாதருமத்தை அதிக கவனத்தோடு பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

தற்காத்துக்கொண்டாள் பேணித்தகைசார்ந்த
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

என்று திருவள்ளுவரும் அருளினர். அதாவது கற்புநிலையிலிருந்து வழுவாமல் தன்னைக்காத்து தன்னைக்கொண்ட கணவனையும் தகுந்தபடி உபசரித்துக்காத்து நற்குண நற்செய்கைகளில் பிசகாமலிருப்பவளே பெண்ணுவாள் என்பதேயாம். இவையன்றி ஒருவனுக்கு உலகத்தில் எல்லாப் பேறுகளைவிட கற்புடைய மங்கையை மனைவியாய் உடைத்தாயிருப்பதே உயர்ந்த பேறென்றுஞ் சொல்லப்படுகின்றது. மேலும்,

தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை.

என்றபடி ஒரு ஸ்திரீயானவள் இதர தெய்வங்களைத் தொழாமலே தினந்தோறும் கணவனையே தெய்வமாகப் பாவித்து தொழுதுகொண்டு வருவாளானல் இப்படிப்பட்ட பதிவிரதையின் வாக்கால் பெய்யென்று சொன்ன மாத்திரத்தில் மழை பெய்யும். இவ்வித நற்செய்கைகளுள்ள ஸ்திரீயை

ஒருவன் மனைவியாய் கிடைக்கப்பெற்றால் அவனையே உலகத்தில் பாக்கிய வானென்று சொல்லவேண்டும். அப்படிப்பட்ட ஸ்திரீயை ஒருவன் இழக்தானாகில் அவனுக்கு உண்டாகும் துக்கத்திற்கு அளவுண்டோ? மேலும்,

தாயோடறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் - ஆயவுடன்
வந்தோன்மரிக்கில் வலிபோம்
மனையெனிலோ அந்தோயிவையெல்லாம்போம்.

என்று கூறியிருக்கிறபடி ஒருவன் தன்னுடைய தாய் தந்தை புத்திரன் சகோதரன் முதலியவர்களை இழப்பானாகில் அதனால் அவனுக்கு அதிக கஷ்டமுண்டாகாது. மேற்சொன்ன கற்போடு கூடிய மனைவியை ஒருவன் இழப்பானேயாகில அவனுக்கு உலகத்திலுண்டான எல்லா சம்பத்துக்களும் அவளோடு போய்விடும். மேலும் இதற்கறிகுறியாக தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் மேற்சொன்ன பதிவிரதா லட்சணமமைந்த தன்னுடைய மனைவியாள் இறந்துபோனபொழுது அவர் புலம்பினதைக் கேளுங்கள்.

அடிசிற்கினியாளே அன்புடையாளே
படிசொற்கடவாத பாவாய் - அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழும் பேதாய் போதியோ
மென்றூங்கு மெண்கணிரா.

அதாவது என்னுவிற்கினிமையாகிய அறுசுவையோடு கூடிய உணவைச்சமைத்து என்னருகிலிருந்து இதமான வார்த்தைகளால் என்னையுபசரித்து உண்பித்து வந்தவளே, என்னிடத்தில் நீங்காத உள்ளன்புடையவளே, தெரு வாசற்படி கடவாதவளே, என்னுடைய வார்த்தையை யெப்போது மெதிர்த்துப்பேசாமல் கடவுள் வாக்காய் பாவித்து நடந்தவளே, இரவிலென்பாதத்தை நெடுநேரம் வருடிக்கொண்டிருந்து நான் நித்திரை செய்தபின்பு சற்று நித்திரை செய்து நான் விழிப்பதற்கு முன்னரே எழுந்திருப்பவளே, நீ உன் அன்பனாகிய என்னைவிட்டுப் பிரிந்துபோகின்றையே இனி நான் எப்படிக் கண்ணுறக்கங்கொள்வேனென்று அலறியழுதார். நான் சொல்லுகிற கற்பிலட்சணங்களுள்ள ஸ்திரீகளின் பெருமை எப்படிப்பட்டதென்றும் அவர்களுக்குக் கடைசியாக என்ன பலன்களுண்டாகுமென்றால்,

கற்புமேய கனங்குழை மாதரைப்
பெற்றுளோர் தம்மரபும் பெருந்தவக்
கற்பினாற்கொண்ட காதலனுருயிர்ச்
சுற்றம்யாவும் துறக்கத்தினெய்துவார்.

என்றபடி அப்புண்யவதிகள் பிறந்த தங்கள் சந்ததியாரும் இன்னும் மற்றுமுண்டான அவ்விருதிறத்தாருடைய சுற்றத்தார் யாவரும் முடிவில் சுவர்க்கலோகத்தில் சேர்ந்து எல்லா பாக்கியங்களையும் அடைவார்கள். ஆகையால் நமக்கு பதிவிரதா தர்மத்தைவிட மேலாகிய பேறு உலகத்தில் வேறொன்றுமில்லை. நாம் கற்பினால் அநேக காரியங்களைச் செய்து முடிக்கலாம். இதற்குதாரணமாக நல்ல பதிவிரதையாகிய ஒரு ஸ்திரீயானவள் முடவனாகிய தன்னுடைய பர்த்தாவுக்கு நேரிட்ட ரிஷி சாபத்திற் கெதிர் சாபமாக பொழுதுவிடியாமல் போகக்கடவதென்று சொல்ல த்ரிமூர்த்திகள் வந்து அவளை பொழுது விடியச்செய்வாய் என்று கேட்க அந்த சமயத்தில் அப்பதிவிரதையானவள் தன்னுடைய புருஷனுக்கு நேரிட்ட சாபத்தை அத்தேவர்களால் தீர்த்துக்கொண்டு பிறகு தானிட்டசாபத்தைத் தீர்த்து தன் புருஷனைத் தன் கற்பினால் காப்பாற்றிக்கொள்ளவில்லையா? முன் காலத்தில் அநேகம் ஸ்திரீகள் மேன்மையடைந்திருக்கிறார்கள். மிதுலாபுரி ராஜன் புத்திரியாகிய மைத்திரியும் இராவணன் கையிலகப்பட்டு அசோக வனத்தில் அநேக ராக்ஷசக்கூட்டத்தின் நடுவே இருந்தும் தன் கற்புக்கு அழிவு வராமல் காத்துக்கொண்டதை நாம் கேட்டதில்லையா? இன்னும் நளமகாராஜனும் தமயந்தியும் சனிபகவானால் பீடிக்கப்பட்ட சமயத்தில் வனசஞ்சாரஞ் செய்துவரும்பொழுது தன் நாயகனைப் பிரிந்த தமயந்தியானவள் தாயைப்பிரிந்த சேயைப்போலவும், மழையைக்காணாத மயூரம் போலவும், சூரியனைக்காணாத தாமரைபோலவும், மேகத்தைக்காணாத வானம்பாடிபோலவும், பரிதவித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் ஒரு வேடன் கையிலகப்பட்டு அவனைவிட்டு தப்பும் வழி தெரியாமல் பரிதவித்து பின்பு மனதைரியங்கொண்டு அந்த வேளையில் தன் பர்த்தாவின் பாதத்தை பயபக்தியுடன் நினைத்து தன்னுடைய கற்புக்கண்ணால் அந்த வேடனை யெரித்து தன் கற்பைக் காப்பாற்றிக்கொண்டதை நாம் கேட்டதில்லையா? திரௌபதையும் தன் கற்பினால் துரியோதனன் சபையில் தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவில்லையா? சாவித்திரியும் தன்னுடைய புருஷனை எமதருமன் கொண்டுபோனபொழுது தன் கற்பினால் அவரிடமிருந்து தன் புருஷனை மறுபடியும் மீட்டுக்கொண்டு வரவில்லையா?

லக்ஷ்மி அம்மாள்.

இன்னும் வரும்.

## நமது

# விக்டோரியா சக்கிரவர்த்தினியார்.

மகாலக்ஷுமி உருவெடுத்தாற் போல அவதரித்து ஆங்கில தேசத்திற்கு மகா ராணியாகவும், இந்தியாவிற்கு மகா சக்கிரவர்த்தினியாகவும் அரசு செலுத்திவந்த நமது விக்டோரியா மகாராணியவர்கள் தேகவியோக மாயினரென்பதைக் கேட்க சித்தங்கலங்கி, தேகம்பதறி, கண்ணீர் தாரை தாரையாக சுரந்து, மனோவாக்காய மென்ற மூன்ற கரணங்களாலும் நமது நாட்டாரனைவரும் மிகவருத்தப்படுகின்றார்கள். ஆதலின் இச்சமயத்தில் நமது துக்க முழுவதையும் எடுத்துரைக்க சாத்தியப்படவில்லை. அடுத்தசஞ்சிகையில் இதைக்குறித்து விவரித்து எழுது வோம்.

29-1-01. பத்திராதிபர்.